©
GOVERNMENT OF TAMIL NADU
2011

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

## சிறப்பு வெளியீடு

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 42-A] சென்னை, திங்கட்கிழமை, பிப்ரவரி 7, 2011
தை 24, திருவள்ளுவர் ஆண்டு — 2042

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

**2011–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 7–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டப்பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/2011.**

**1939–ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்ட முன்வடிவு.**

இந்தியக் குடியரசின் அறுபத்து இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

1. (1) இந்தச் சட்டம் 2011–ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் X/1939

14–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. 1939–ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டத்தின் 14–ஆம் பிரிவில் (1–B) எனும் உட்பிரிவில் ‘‘துணை வணிக வரி அலுவலர்’’ என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘வணிக வரி அலுவலர்’’ என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

**நோக்க–காரண விளக்கவுரை**

வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் 30–7–2008 எனும் தேதியிட்ட அரசாணை நிலை எண் 71–இல் வணிக வரித் துறையிலுள்ள பிற பதவிகளுக்கிடையே "துணை வணிக வரி அலுவலர்" என்னும் பதவிப் பெயரை "வணிக வரி அலுவலர்" என்னும் பதவிப் பெயராக மாற்றியமைத்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இதனால் 1939–ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் X/1939) 14–ஆம் பிரிவில் வருகின்ற "துணை வணிக வரி அலுவலர்" என்னும் பதவிப் பெயரை மாற்றியமைப்பது தேவையானதாகிறது. எனவே, அரசானது அந்நோக்கத்திற்காக மேற்சொன்ன சட்டத்தைத் தக்கவாறு திருத்துவதென முடிவு செய்துள்ளது.

2. இச் சட்டமுன்வடிவு மேற்சொன்ன நோக்கத்தை எய்த விழைகிறது.

**சி. நா. மீ. உபயதுல்லா,**
*வணிகவரித் துறை அமைச்சர்.*

**மா. செல்வராஜ்,**
*செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.